# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 066/2019/மா
ஆணை நாள்: 18–02–2020

திருமதி. எஸ். பூமா,
அம்பத்தூர்,
சென்னை – 600 053. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர் மற்றும் அலுவலர்கள்,
மண்டலம் – 07,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்கள்

சென்னை 53, அம்பத்தூர், ராம் நகர், A.P. அரசு தெரு, பிளாட் எண்.03 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. S. பூமா என்பவரது 27.08.2019 நாளிட்ட முறையீட்டு மனு 29.08.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண்.066/மா/2019 என எண்ணிடப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை:**

முறையீட்டு மனுதாரர் தனது 27.08.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில், சென்னை மாநகராட்சி, ஒரகடம் கிராமம், வெங்கடேஸ்வரா நகர், A.P. அரசு தெருவில் உள்ள தனக்கு சொந்தமான மனை தனது கட்டுமான பங்குதாரர் M/s. G.P.R. Builder அளிக்கப்பட்ட பொய்யான உறுதி ஆவணத்தின் அடிப்படையில் M/s. G.P.R. Builder- க்கு தனது ஒப்புதலின்றி முந்தைய அம்பத்தூர் நகராட்சி அலுவலர்களால் முறைகேடாக உட்பிரிவு செய்யப்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், இது சம்மந்தமாக சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் M/s. GPR Builder மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 09.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் சென்னை மாநகராட்சி, அம்பத்தூர், மண்டலம் -07, ராம் நகர், அ.போ. அரசு தெரு, எண்.03, என்ற முகவரியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் மொத்த பரப்பளவு 3173 சதுர அடியில் 971 சதுரடி பிரிவுபடாத பாகமாக (1) திரு. கணேசன் (2) திரு. கே. கே. பிரசாத் மற்றும்

(3) திரு. R. ரவிச்சந்திரன் ஆகிய மூவரிடமிருந்து அம்பத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 4172/2005 ன்படி கிரயம் பெற்றுள்ளதாகவும், மீண்டும் இவ்வாவணத்திற்கு ஒரு திருத்திய ஆவணம் எண். 7538/2005 மூலம் மொத்த பரப்பளவு 3173 சதுர அடியில் பிரிக்கப்படாத பாகம் 971 சதுரஅடி என்பதற்கு பதிலாக மொத்த பரப்பளவு 2033 சதுர அடியில் 971 சதுரஅடி பிரிவுபடாத பாகமென திருத்தம் செய்து அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அப்பிழைதிருந்த பத்திரம் பதிவு செய்யப்படுவதற்கு முன்பே அப்போதைய அம்பத்தூர் நகராட்சியால் தனது ஒப்புதலின்றி மனை எண்.3A, 3B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்ட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி 7வது மண்டல அலுவலர் 09.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் இந்நிகழ்வுகள் அம்பத்தூர் நகராட்சியாக இருந்தபோது நடந்தவை என்றும், அம்பத்தூர் நகராட்சி 25.10.2011 ல் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட போது நகராட்சியால் ஒப்படைக்கப்பட்ட கோப்பில் மனுதாரர் குறிப்பிடும் Affidavit காணப்பெறவில்லை என்றும், ஒப்படைக்கும் போதே அது கோப்பில் இல்லை என்பதை பொறுப்பு ஏற்றுக் கொண்ட அலுவலர் குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

அம்பத்தூர் நகராட்சியாக இருந்த போது நகரமைப்பு அலுவலராக பணிபுரிந்து தற்போது கும்பகோணம் நகராட்சியில் நகரமைப்பு அலுவலராக பணிபுரியும் திரு. எஸ். பாஸ்கரன் விசாரணையின் போது அளித்த வாக்குமூலத்தில் மனை உட்பிரிவு அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள 2.6.2005ல் தான் அம்பத்தூர் நகராட்சியில் பணிபுரியவில்லை என்றும், 05.09.2006 அன்று அம்பத்தூர் நகராட்சியில் பணியில் சேர்ந்ததாகவும் மனுதாரர் குறிப்பிடும் நாளில் அம்பத்தூர் நகராட்சியில் பணிபுரியவில்லை என்றும், எனவே தன்னை இக்குற்றச்சாட்டலிருந்து விடுவிக்குமாறும் தெரிவித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி 07வது மண்டல அலுவலர் தனது 07.01.2020 நாளிட்ட அறிக்கையில் மனுதாரர் குறிப்பிடும் நிகழ்வு அம்பத்தூர் நகராட்சியாக இருந்தபோது நடைபெற்றுள்ளது என்றும், அம்பத்தூர் நகராட்சி சென்னை மாநகராட்சியுடன் 25.10.2011ல் இணைக்கப்பட்டபோது ஒப்படைக்கப்பட்ட கோப்புகளில் மனுதாரர் திருமதி. S. பூமா குறிப்பிடும் கோப்புகள் ஒப்படைக்கவில்லை என்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் ஆணையின்படி மீண்டும் ஒருமுறை தேடிப்பார்த்த போதும் மனுதாரர் குறிப்படும் கோப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி 7வது மண்டலம், நகரமைப்பு பிரிவில் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம், மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம், முன்னாள் நகரமைப்பு அலுவலர் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் குறிப்பிடும் நிகழ்வு நடைபெற்று ஐந்து ஆண்டுகள்

கடந்த விட்ட நிலையில், 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (c) ன்படி முறைமன்ற நடுவரின் விசாரணை வரம்பிற்குள் வராது என்பதால் இம்முறையீட்டு மனுமீதான விசாரணையை இந்நிலையிலேயே கைவிடலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு பிரப்வரி திங்கள் 18-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 13.3.20

3/8

பெறுநர்

1) திருமதி. எஸ். பூமா,
முதல் மாடி, மனை எண். 03,
அ.பொ.அரசு தெரு, ராம் நகர்,
அம்பத்தூர்,
சென்னை – 600 053.

13/3/2020

2) மண்டல அலுவலர்,
மண்டலம் – 07,
பெருநகர சென்னை மாநகராட்சி.
சென்னை திருப்பதி நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை – 600 053.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்